பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

25 05 2026 MONDAY 6 30 PM

## வணக்கம்-மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- நடப்பாண்டிற்கான பத்ம விருதுகளை, குடியரசுத்தலைவர் திருமதி.திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் வழங்கினார்.
- மேகதாது அணை விவகாரத்தில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட தேவையான தொடர் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. விஜய், அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.
- அஇஅதிமுக சட்டப்பேரவை உறுப்பினர்கள் 3 பேர் தங்களது பதவியை ராஜினமா செய்துவிட்டு, த.வெ.க-வில் இணைந்துள்ளனர்.
- தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்று திமுக, பிஜேபி உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.
- ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>><<<<<

நடப்பாண்டிற்கான பத்ம விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று வழங்கினார்.

புதுதில்லியில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில், 2 பேருக்கு பத்மவிபூஷன் விருதுகளும், 6 பேருக்கு பத்மபூஷன் விருதுகளும். 58 பேருக்கு பத்மஸ்ரீ விருதுகளும் வழங்கப்பட்டன.

மறைந்த நடிகர் தர்மேந்திராவிற்கு அறிவிக்கப்பட்ட பத்மவிபூஷன் விருதை அவரது மனைவி திருமதி. ஹேமமாலினி பெற்றுக் கொண்டார்.

தமிழகத்தைச் சேர்ந்த டாக்டர் கள்ளிப்பட்டி ராமசாமி பழனிசாமி உட்பட 6 பேர் பத்மபூஷன் விருதை பெற்றுக் கொண்டனர்.

தமிழகத்தைச் சேர்ந்த 6 பேர் பத்மஸ்ரீ விருதை பெற்றனர்.

எழுத்தாளர் சிவசங்கரிக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

(சவுண்ட் பைட் – 15 செகண்ட்)

இந்த நிகழ்ச்சியில் குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் அமைச்சர்கள் பங்கேற்றனர்.

>>>>><<<<<

மேகதாது அணை விவகாரத்தில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட தேவையான தொடர் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. விஜய் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று சென்னையில் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மற்றும் சட்ட வல்லுநர்களோடு ஆலோசனை மேற்கொண்ட பின்னர் முதலமைச்சர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>><<<<<

இதற்கிடையே, மேகதாது அணை தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு உடனடியாக சீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. சண்முகம் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இப்பிரச்சினையில் மேற்கொள்ள வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து விவாதிப்பதற்காக, அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு தமிழக அரசு அழைப்பு விடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

அஇஅதிமுக சட்டப்பேரவை உறுப்பினர்கள் 3 பேர் தங்களது பதவியை ராஜினமா செய்துவிட்டு, த.வெ.க-வில் இணைந்துள்ளனர்.

மதுராந்தகம் சட்டப்பேரவை உறுப்பினர், திருமதி. மரகதம் குமரவேல், பெருந்துறை சட்டப்பேரவை உறுப்பினர் திரு. ஜெயக்குமார், தாராபுரம் சட்டப்பேரவை உறுப்பினர் திருமதி. சத்யபாமா ஆகியோர் பேரவைத் தலைவர் திரு. ஜே.சி.டி. பிரபாகரனை சந்தித்து தங்களது ராஜினாமா கடிதங்களை வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து, இவர்கள் மூவரும் மாநில அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜூனா முன்னிலையில் த.வெ.க-வில் இணைந்தனர்.

இதற்கிடையே, செய்தியாளர்களிடம் பேசிய பேரவைத் தலைவர் திரு. ஜே.சி.டி. பிரபாகர், 3 பேரின் ராஜினாமாவும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாக அறிவித்தார்.

>>>>><<<<<

தமிழகத்தில் த.வெ.க. அரசு பொறுப்பேற்ற கடந்த 15 நாட்களில் 29 கொலைச் சம்பவங்களும், 19 பாலியல் குற்றங்களும் நடைபெற்றுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாற்றம் என்று சொன்னவர்களின் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு மாறியிருப்பதற்கு இந்த சம்பவங்களே சாட்சி என்று குறிப்பிட்டுள்ளார்.

பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றச்சம்பவங்களை தடுக்க, முதலமைச்சர் ஆக்கபூர்வமாக என்ன செய்யப் போகிறார் என்ற தமிழகத்தின் கேள்விக்கு அவர் உடனடியாக பதில் சொல்லியாக வேண்டும் என்றும் திரு. உதயநிதி ஸ்டாலின் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை த.வெ.க. அரசு மேற்கொள்ள வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், த.வெ.க. அரசு பொறுப்பேற்ற பின்னர் நடைபெற்ற குற்றச்சம்பவங்களை பட்டியலிட்டுள்ளார்.

அரசு ஊழியர்களை ஆளும் கட்சியினர் அச்சுறுத்தும் போக்கு தொடர்வதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கெல்லாம் முதலமைச்சர் பதில் சொல்வாரா என்று மக்கள் எதிர்பார்ப்பதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்

>>>>><<<<<

உலகப் புகழ்பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவில் அருகே 16 வயது சிறுவன் வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவம், சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதை எடுத்துரைப்பதாக பிஜேபி கூறியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், மக்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாகவும், இதுதொடர்பாக த.வெ.க. அரசு மௌனம் காப்பது கண்டனத்திற்குரியது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை த.வெ.க. அரசு தீவிரப்படுத்த வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திரு. தொல் திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், கோவை மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெற்ற சிறுமிகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் அதிர்ச்சியளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமிகளின் குடும்பத்தினருக்கு உரிய இழப்பீட்டு தொகையை த.வெ.க. அரசு வழங்க வேண்டும் என்றும் திரு. தொல் திருமாவளவன் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

கூட்டுறவு வங்கிகளில் 50 ஆயிரம் ரூபாய் வரை பயிர்க்கடன் பெற்ற குறு விவசாயிகளுக்கு முழுமையாக பயிர்கடன் தள்ளுபடி செய்யப்படுவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

கூட்டுறவு வங்கிகள் மூலம் பயிர்க்கடன் பெற்ற இதர பெரு விவசாயிகளுக்கு தலா 5 ஆயிரம் ரூபாய் பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்படுவதாகவும் மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்மூலம், கடந்த ஆண்டு மே மாதம் ஒன்றாம் தேதி முதல் நடப்பாண்டு பிப்ரவரி மாதம் 28ஆம் தேதிவரை கூட்டுறவு வங்கிகளில் பயிர்க்கடன் பெற்றுள்ள 14 லட்சத்துக்கு மேற்பட்ட விவசாயிகள் பயனடைவார்கள் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள அனைத்து திரையரங்குகளிலும், புதிய தமிழ்த் திரைப்படங்கள் வெளியிடப்படும் நாளிலிருந்து 7 நாட்களுக்கு தினசரி 5 காட்சிகளை திரையிட அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாக மாநில அரசின் மற்றொரு செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>><<<<<

கோவை, திருப்பூர் உள்ளிட்ட 12 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 3 தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர். விஆர். துரை கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - துரை 55 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

சேலம் மாநகராட்சி ஆணையாளராக திரு. லலித் ஆதித்ய நீலமும், திருப்பத்தூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக திரு. Akshay Anil Vahare-யும், தென்காசி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக திரு. அசோக்குமாரும் இன்று பொறுப்பேற்றுக் கொண்டனர்.

>>>>><<<<<

ராணிப்பேட்டை மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திருமதி. சந்திரகலா அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

கடலூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் செயல்படும் அம்மா உணவகங்களில் ஆட்சியர் திரு. சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>><<<<<

செங்கல்பட்டு மாவட்டத்தில் தூய்மை திருவிழாவை ஆட்சியர் திருமதி. மாலதி ஹெலன் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்து சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

வியட்நாமில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 57 கிலோ எடைப்பிரிவில் Akshay Tanaji Dhere தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 65 கிலோ எடைப்பிரிவில் குமார் மோஹித்-க்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 4 தங்கம், 6 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது

>>>>><<<<<

ஆசியா ஓசியானா அல்ட்ரா ஓட்டப் போட்டியில், இந்தியா 2 தங்கம் உட்பட 5 பதக்கங்களை வென்றது.

ஜப்பானில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் தனிநபர் பிரிவில், Amar Singh Devanda தங்கப்பதக்கத்தையும், Geeno Antony வெள்ளிப்பதக்கத்தையும், சவ்ரவ் குமார் ரஞ்சன் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

இந்தியா, ஆடவர் குழுப்பிரிவில் தங்கப்பதக்கத்தையும், மகளிர் குழுப்பிரிவில் வெண்கலப்பதக்கதையும் வென்றது.

>>>>><<<<<

Lagos சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனவ் தாக்கர் - மனுஷ் ஷா இணை பட்டம் வென்றது.

c/o ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 11-7, 12-10, 11-4 என்ற செட்கணக்கில் Romania-வின் Chirita - Istrate இணையை வென்றது.

>>>>><<<<<

ஆஸ்திரியா ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanvi Patri வெள்ளிப்பதக்கம் வென்றார்.

>>>>><<<<<

பிரான்ஸில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Swastika Ghosh - Taneesha Kotecha இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>><<<<<

மத்திய ஆசிய மகளிர் வாலிபால் சாம்பியன் போட்டியில், இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

காட்மாண்டுவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் இன்றைய லீக் ஆட்டத்தில் இந்தியா, கிர்கிஸ்தானை வென்றது.

>>>>><<<<<

18 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கூடைப்பந்து தகுதிச்சுற்று போட்டியில் இந்தியா 130-60 என்ற புள்ளிக்கணக்கில் மாலத்தீவை வென்றது.

>>>>>end<<<<<